செய்தி வெளியீடு எண்: 721 நாள் 5.11.07.

# செய்திக் குறிப்பு

அண்ணா மேலாண்மை நிலையம்
(தமிழ் நாடு அரசின் சார்பு நிறுவனம்)
163/1, பி.எஸ். குமாரசாமி ராஜா சாலை, சென்னை 600 028
தொலைபேசி – 24937170, 24938247, 24610300, 24613726

அண்ணா மேலாண்மை நிலைய ஆட்சிக் குழு கூட்டம் இன்று காலை 11.00 மணியளவில் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் ஆற்காடு நா. வீராசுவாமி, அவர்களின் தலைமையில் நடந்தது. இந்த ஆட்சிக் குழு கூட்டத்தில் அண்ணா மேலாண்மை நிலையத்தின் வளர்ச்சிக்கான பல புதிய திட்டங்கள் விவாதிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

இந்திய மேலாண்மைக் கழக நிலையமும் (பெங்களூர்) (IIM-Bangalore), அண்ணா மேலாண்மை நிலையமும் கூட்டாக இணைந்து இந்திய ஆட்சிப் பணியில் இருக்கும் அலுவலர்களுக்கு தேவைப்படும் சிறப்பு பயிற்சிகளை வடிவமைத்து, பயிற்சி முகாம்களை அண்ணா மேலாண்மை நிலையத்தில் நடத்தப்பட உள்ளது.

இதேபோல், சிங்கப்பூரிலுள்ள நேஷனல் யூனிவர்சிட்டி ஆப் சிங்கப்பூருடனும் (NUS) இணைந்து, அண்ணா மேலாண்மை நிலையம் பல பயிற்சி முகாம்களை அரசாங்க அலுவலர்களின் தேவையின் பொருட்டு நடத்த இக்குழு இன்று அனுமதி அளித்துள்ளது.

இதேபோல், அண்ணா மேலாண்மை நிலையத்தில் ஒரு நல்லாட்சிக்கான ஆராய்ச்சி மையம் (Centre for Good Governance) அமைக்கப்பட உள்ளது. இது மட்டுமன்றி அரசு அலுவலர்களுக்காக தமிழ், ஆங்கிலம், சீன மற்றும் ஜப்பானிய மொழிகளை செவ்வனே பயிற்றுவிக்க ஒரு கூடம் அமைக்கப்பட உள்ளது.

இது தவிர, அண்ணா மேலாண்மை நிலையத்தில் ஒரு தகவல் சேகரிப்பு மையத்தை (Knowlegde Data Centre) அமைத்து, மாவட்டங்களில் உள்ள அதிகாரிகளுக்கு இணைய தளத்தின் மூலம் பயிற்சிகளை பயிற்றுவிக்க இக்குழு அனுமதி அளித்துள்ளது.

மேலும் அண்ணா மேலாண்மை நிலையமானது தமிழ்நாடு அரசு நிறுவனங்களில் ( PSU) பணிபுரியும் அலுவலர்களுக்கு, அவர்கள் நிறுவனம் தரச் சான்றிதழ் (ISO) பெற க்யூ.சி. எப்.ஐ. (QCFI) யுடன் இணைந்து பயிற்சிகளை நடத்த இக் குழு இன்று அனுமதியளித்துள்ளது. இதனால் தமிழ்நாட்டில் உள்ள 40 அரசு நிறுவனங்களும் (Tamil Nadu Public Sector Undertakings) தரச் சான்றிதழ் பெறும் வாய்ப்பு அதிகரித்துள்ளது.

இது தவிர, டாடா கன்சல்டன்சி சர்வீஸ் (Tata Consultancy Services) தமிழ்நாட்டு அரசு அலுவலர்களுக்காக திறம் மேம்பாட்டு பயிற்சியினை அண்ணா மேலாண்மை நிலையத்துடன் இணைந்து நடத்த ஒப்புதல் அளித்துள்ளது.

---

5/11/07

Senior Personal Assistant to
Minister for Electricity
Secretariat, Chennai-600 009